**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP.No. 432/2013** **Date: 15.12.2022**

பெயர் - சிவக்குமார்- (**PW**1)

**முதல் விசாரணை தொடர்ச்சி (சத்தியபிரமாணத்தின் பேரில்)**

நான் இந்த மனுவில் மனுதாரர் மற்றும் ம.சா.1 ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதில் நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 10 ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளேன். அது ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ 10 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றது. எனவே, மனுப்படி உத்தரவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடைய வயதை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தேனா? என்றால் வைத்திருந்தேன். விபத்தின் போது பொலிரோ கார் வந்த திசை சரியான திசை என்றால் சரிதான். நான் சென்ற சாலை நேரான சாலை என்றால் சரிதான். காயச்சான்றிதழில் குறிப்பிட்ட காயங்களை தவிர வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. நான் 4 நாட்கள் மட்டும் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். என்னுடைய மருத்துவ விடுவிப்பு குறிப்பின் படி எனக்கு தகடு மற்றும் திருகாணி பொருத்தப்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எனக்கு முழுமையாக குணமடைந்த பின்பு தான் விடுவிப்பு செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு நன்கு குணமான பின்பு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை முறை மருத்துவமனைக்கு சென்றேன் என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். எனக்கு முழுமையாக குணமாவிட்டபடியால் மனுவில் கோரியுள்ளபடி எனக்கு போக்குவரத்துசெலவு, மற்றும் ஊட்டச்சத்து செலவு கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் நான் யாரிடம் விபத்து சமயத்தில் வேலைபார்த்து வந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆகவே என்னுடைய சம்பளம் இவ்வளவு என்று குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் நான் வேலை பார்த்த லாரியின் உரிமையாளர் யார் என்று கூறாததால், நான் ரூ.15000 சம்பளம் வாங்கியதாக உறுதியாக கூற இயலாது என்றால் சரியல்ல. 2011 ல் நான் எல்எம்வி வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் பெற்றேன். 2012 ல் கனரக வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் பெற்றேன். பொதுப்பணிவில்லை எப்போது பெற்றேன் என்றால் 2012 ல் பெற்றேன். ஓட்டுநர் உரிமத்தை தற்போது புதுப்பித்துள்ளேன். நான் முழுமையாக குணமடைந்து விட்டதால்தான் தற்போது ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்துள்ளேன் என்றால், நான் விபத்தினால் வண்டிக்கு ஓட்டுநராக செல்லவில்லை. தற்போது அசல் ஓட்டுநர் உரிமம் என் வசம்

தான் உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது ஓட்டுநர் வேலைக்கு செல்லாததால் அசல் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா? என்றால் உள்ளேன். தற்போது நான் ஓட்டுநர் வேலைக்கு சென்றால் கால் வீங்கிவிடுவதால் தற்போது மாடு மேய்த்து அதன் மூலம் தான் தொழில் செய்து வருகிறேன். மாடு எவ்வளவு பால் கறக்கும் என்றால் ஒரு நாளைக்கு 7 லி பால் கறக்கும். ஆகவே தற்போது வருமானம் வந்து கொண்டிருப்பதால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது நான் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரேன்று தடையை பயன்படுத்தியதால்தான் பொலிரோ கார் என் மீது மோதிவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு என் அஜாக்கிரதை காரணமாக இருப்பதால் 2 ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/- சிவக்குமார்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.